84

584

OFFICE OF THE ... BOOKS
MAR 1942

உ

# வைத்திய சந்திரிகா.

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.

பிரதி ஆங்கிலமாதம் முதல்வாரத்தில் வெளிவரும்

**Vol. 4 March 1942 No. 3**

விஷய சூசிகை. பக்கம்

ஹிருதயரோக விசாரத்தின் கடைசி நான்கு சுலோகங்கள் 1
ஹிருதயரோக விசாரம் (வடவனூர் Dr. V. N. நாயர்) 1—10
சித்தர் முறை (பண்டிட் நாராயணய்யங்கார்) 11—24
ஸந்நிபாதம் (பத்திராதிபர்) 25
திருச்சி ஆயுர்வேத ஸபா (காரியதரிசி) 26
ஓர் சந்தேகம் (ஓர் ஹக்கிம்) 26

2631

**சந்தா விகிதம்.**

வருஷ சந்தா:—
உள் நாட்டுக்கு ரூ. 2
வெளிநாட்டுக்கு ரூ. 3

**விளம்பர விகிதம்.**

மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு ரூ 8
,, ,, ½-க்கு ரூ 4
,, ,, ¼-க்கு ரூ 2

கிடைக்குமிடம்:—

Pandit, S. NARAYANA IYENGAR.

Editor and Publisher.

[illegible] Police Station West Lane, Madura.

[விலை 0—3—0

JL
L:5 ...
N42·4'3
210205

வடவனூர் Dr. V. N. நாயர் அவர்களின் ஹிருதயரோக விசாரத்தில் கடைசியிலுள்ள நான்கு சுலோகங்கள்.

(1) மாபூகாகமபிடேதி பரிமேய பாரக்திருசா। எவம்மிருது மயாக்ராத மாயுர்வேத ஹ்ருதம்புஜம் ll (2) பூர்வேஷாம் பக்ஷமாச்ரித்ய ப்ரவிருத்தம்மே வசோயதி। பூர்வபக்ஷதயா நவ்யைர் க்ருஹ்யதே சித்ரமத்ர கிம் ll (3) அக்ஷுண்ண விஷம சந்ந வர்த்ம பாந்த பதக்ரம:। ஸ்கலிதோ நாந்யபீடாயை பலிதஸ்த்வகிலச்ரியே ll (4) ச்ரீ நீலகண்ட குருவர்ய பதாரவிந்த நிர்யந் மரந்த லஹரீ சிசிரீ கிருதேந। நாராயணேன பிஷஜா ஹ்ருதயம் ப்ரகிருத்யஹ்ருத் ரோகவர்ணன வசாத் ரசிதோ விசார:ll இந்நான்கு சுலோகங்களில் மூன்று சுலோகங்களுக்கு மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு ஒரு சுலோகம் தவறுதலாக விடப்பட்டிருப்பதால் அதன் மொழிப் பெயர்ப்பை மாத்திரம் இங்கு எழுதுகிறோம். விடப்பட்ட சுலோகம் மூன்றாவதாகும். அதன் பொருள்—இதற்கு முந்தி ஒருவரும் போகாததும், மேடுபள்ளம் நிறைந்தும், புதர் முதலியவைகளால் மறைந்துமுள்ள ஓர் மார்க்கத்தில் ஓர் வழிப்போக்கன் செல்லும் பொழுது இடறி விழுந்தால் அவனுக்குப் பீடையுண்டாகுமே யன்றி மற்றவர்களுக்கு யாதொரு தொந்திரவும் நேராது. அவ் வழியில் சரிவரச்சென்று பலித்துவிட்டால் எல்லாருக்கும் அது அனுகூலமாகும். அதுபோல இந்த ஹிருதயரோக விசாரத்தில்இது வரையில் யாராலும் ஆராயப்படாமலும், நூல்களில் முன்னுக்குப் பின் முரண்பாடுள்ளதாயும், மிகவும் மறைந்தும் இருக்கும் ஹிருதயம், க்லோம, புப்புஸம், ஆமாசயம், என்ற உறுப்புகள் ஆராயப்பட்டு அந்த ஆராய்ச்சி தவறிவிடுமாகில் அது ஆராய்ச்சியாளருக்கு மாத்திரம் ஓர் குறையை யுண்டுபண்ணுமேயல்லாது மற்றவர்களுக்கு ஓர் தீங்கையும் யுண்டுபண்ணாது. ஒரு சமயம் இந்த ஆராய்ச்சி பலித்துவிடுமாகில் அது எல்லாருக்கும் வழிகாட்டிக்கொண்டு அர்த்த தத்துவத்தை விளக்குவதாகும்.

OFFICE OF THE ... OF BOOKS
1? MAR 1942
MADRAS

ஹிருதயரோக விசாரம். (மூன் சந்திரிகைத்தொடர்ச்சி)

(வடவனூர் Dr. V. N. நாயர் அவர்கள்)

ஹிருதயத்தை அடைவதற்கு முந்தி அன்னரஸத்தின் இருப்பிடமாகிய ஆமாசயத்தில் திரிதோஷம் விருத்தியை யடைந்திருந்தபோதிலும் இயற்கைக்குக் கட்டுப்பட்டு வியாதியை யுண்டு பண்ண சக்தியற்று இருக்கும் நிலைமை "ஸஞ்சிதம்" என்று நூல்கள் கூறும். அளவுக்கு மீறி விடுவதால் இயற்கையின் கட்டுப்பாட்டையும் மீறி வேறு ஸ்தானத்திற்குத் திரிதோஷம் செல்லும்போது "பிரகோபம்" "விகுணம்" எனப்படுகின்றது. இந்த ரஸம் முதலில் ரஸவஹஸ்ரோதஸ்ஸின் மார்க்கமாக வியான வாயுவால் செலுத்தப்பட்டு ஹிருதய நாபி கர்ணிகையை (Heart) அடைந்து அங்கிருந்து ஹிருதய உறுப்புகளின் நுண்ணிய அணுக்களை அடைந்து பிராணவாயுவால் சுத்திபெற்று சீர்மையடைந்து மறுபடியும் ஹிருதய கர்ணிகையை (Heart) யடைந்து அங்கிருந்து ரக்தக்குழாய்கள் மூலமாக அங்கப்ரத்யங்க தாதுக்களை யடைகின்றதென நவீனக் கொள்கைப்படி அறியவேண்டும். ஹிருதயத்தை யடைந்துள்ள அபக்வ ரஸத்துடன் பிணைந்துள்ள திரிதோஷங்கள் அதாவது இயற்கைக்கு விருத்தங்களான ரூக்ஷாதிகளான குணங்கள் ஹிருதயக் கூட்டின் இடைவெளியிலும் ரஸவஹஸ்ரோதஸ்ஸுக்களிலும், ஹிருதய நாபிகர்ணிகையிலும், அதோடு சேர்ந்துள்ள ஸிரை தமனி முதலியவைகளிலும் ஹிருதய யந்திரத்திலும், அதை அடுத்துள்ள கோஷ்ட உறுப்புகளிலும், ஹிருதயத்தின் மேல் ஆவரணத்திலும், ஹிருதயத்தின் சுவர்களிலும், ஹிருதயத்தின் உள் ஆவரணத்திலும், பற்பல நோய்களை யுண்டுபண்ணுகின்றன. அங்கு ரூக்ஷாதிகளான வாதகுணங்கள் பிரகோபத்தை யடைந்தால் தோதம், ஆயாமம், சோஷம், நடுக்கம், ஸ்புடனம், தாரணம், சூன்யத்வம், சூலம், ஸங்கோசம், விக்ஷேபம் முதலிய வாதநோய்கள் உண்டாகின்றன. உஷ்ணாதிகளான பித்த குணங்கள் பிரகோபத்தை யடைந்தால் த்ரவம், மூர்ச்சை, வியர்வை, தாஹம், பிரமம், க்லமம், என்ற நோய்களும், குரு முதலிய கப குணங்கள் பிரகோபத்தை யடைந்தால் கனத்தல், ஜாட்யம், பாரம், ஆலஸ்யம், அருசி, ஸ்தம்பம், முதலிய நோய்களும் ஹிருதயப்

210205

பிரதேசத்தில் காணுகின்றன. ஹிருதய இடைவெளியின் நடுவிலும் பக்கங்களிலும், மேலும் கீழும், காணும் இந்நோய்கள் ஹிருத் ரோகங்களெனப்படுகின்றன. இவ்விதம் அனுபவத்தில் காணும் சில குறிகளைக் கொண்டு வாதஜம், பித்தஜம், இது முதலிய வியவஹாரங்கள் சாஸ்திரங்களில் காணப்படுகின்றன. ஹிருதயத்தின் இடைவெளி, நடுபாகம், பக்கங்கள், மேல்பாகம், கீழ்பாகம், ஆகிய இப்பாகங்களில் அனுபவிக்கப்படும் இந்நோய்கள் ஹிருத்ரோகம் என்று அழைக்கப்படுகின்றன. வேதனை உண்டாவதற்குக் காரண மென்னவெனில் உள் உறுப்புகளில் காணும் 'சேர்பம், பாகம், விரணம், சோஷம், ஸ்தம்பம், கம்பம், விதக்ததா, க்லேதம், ஸுப்தி, க்ரதிததா, சைதில்யம், ருக்ஷதா, இவைகளே. இந்த சோபாதிகளான விகாரங்கள் நமக்குப் பிரத்யக்ஷமாகப் புலப்படுவ தில்லை. அனுபவிக்கும் வேதனைகளை யொட்டி இவைகளை ஊகிக்கின்றோம். இந்த கியானம் வியவஹாரம் மட்டில் பிரயோஜன முள்ளதாகின்றது. பிரகோபத்தை யடைந்தத் திரிதோஷங்களை யறிவதற்குச் சாதனமான வேதனா ரூபங்களான லிங்கங்களைக் கொண்டு சிகித்சை செய்யவேண்டும். இந்த லிங்கங்களை நாம் பிரச்னத்தாலும் ஸ்பர்சனத்தாலும் பரீக்ஷித்து அறியவேண்டும். இந்த பரீக்ஷை முறையில் தேச காலாதிகளை யொட்டி சில சீர்திருத்தங்கள் எங்கும் இஷ்டமே. ஆகவே நவீன முறைகளால் ஹிருதய பரீக்ஷையும் நமக்குத் தள்ளுபடியல்ல. பரீக்ஷை முறைகளை அழகு படுத்தக்கூடிய சீர்திருத்தங்கள் எங்கும் ஆக்ஷேபிக்கப்படுவ தில்லை. தோஷங்கள், தூஷ்யங்கள், பிரகிருதி, விகிருதி, முதலிய வியவஹாரங்கள், ஆச்ரயம், ஹேது, லிங்கம், இவை முதலியவைகளால் விகல்பிக்கப்பட்டு தாறுமாறு ஆகக்கூடாதென்பது நோக்கம். ஹிருத்ரோகத்தில் அபக்வமான ரஸம்தான் தூஷ்யமாகிறது. ஆகவே ரஸம் அல்லது அதைக் கெடுக்கும் தோஷம் ஸாமம் எனப்படு கின்றது. இந்நோயில் யோகவாஹியான வாதமே முக்கியமான தோஷமாகும். ஆகவே "மிகுந்த உஷ்ணம், குரு, ஆகிய ஆகாரங்கள், கஷாயம், கசப்பு, சிரமம், அபிகாதம், அத்யசனம், மிகுந்த சிந்தை, வேகங்களை அடக்குதல், ஆகிய இவைகளால் ஐந்து விதமான ஹிருதயரோகம் சம்பவிக்கின்றது" என்று சுசுருதத்திலும்,

"குன்மரோகத்தின் நிதானங்களும் ஸம்பிராப்தியும் ஹிருதய ரோகங்களுக்கும் பொருந்தும்" என்று வாக்படத்திலும் வாதப்பிர கோபத்தின் காரணங்களே மிகுந்து சொல்லப்பட்டிருக்கின்றன. பரிணாமசூலம், அன்னத்திரவ சூலங்கள், ஆகிய இந்நோய்கள் ஹிருத்ரோகப் பிரகரணத்தில் அடங்கிவிடுகின்றன. குன்மத்திற்கு ஸ்தானமான ஆமாசயமும் ஹிருதயமும் ஹிருத்ரோகத்திற்கும் ஸ்தானமாகச் சொல்லப்பட்டிருக்கிற தென்றும், வாதத்தின் முக்கியத் தன்மைபோல ஹிருதயம் என்ற பதத்தின் பொருள்களில் ஆமாசயமான Stomach என்ற உறுப்பு அடங்கிவிடுகிறதென்றும் விளங்குகிறது. ஹிருத்ரோகங்களில் பித்தஜம் நீங்கலாக மற்றவை களில் தீக்ஷ்ணம், உஷ்ணம், ரூக்ஷம், அம்லம், க்ஷாரம், இவை முதலிய திரவ்யங்களால் சிகித்சை சொல்லப்பட்டிருப்பதால் ஹிருதய கர்ணிகை நீங்கலாக உள்ள ஹிருதயப் பிரதேசமே ஹிருதயரோக ஸ்தானமென்பது ஊர்ஜிதமாகிறது. மஹாமர்ம ஸ்தானமாகிய ஹிருதயகர்ணிகை ஆக்னேயமானது பற்றி ஆமா சயத்தை முக்கியமாகக் கொண்டுசொல்லப்படும் நோய்கள் ஹிருதயப் பிரதேசத்தை சம்பந்திப்பதில்லை. ஆகவே கபஸ்தானமாகவும், ஆமா சயம் என்ற பெயருக்கு அர்ஹமாகவும் இருக்கின்றவைகளாகவும் ஹிருதயத்தை யொட்டிய ஸந்தி, ஸ்நாயு, பேசி, சர்மபாகங்களும் இரைப்பையும் ஹிருதய யந்திரத்தின் நாளமும், அன்னவஹஸ் ரோதஸ்ஸும் இவை முதலியவைகள் ஹிருதய நோய்களுக்கு ஸ்தானங்களாகின்றன. மூர்ச்சை, க்லமம், முதலிய லக்ஷணங்களால் ஊகிக்கப்படும் பித்தஜ ஹிருதய ரோகத்தில் ஹிருதய கர்ணிகையே ரோகஸ்தானமாக அங்கீகரிக்கின்றோம். இது உலக வியவஹாரத் திற்காகவே. சிகித்சையின் பொருட்டோவெனில் பித்தஜம் என்ற அறிவு போதுமானதாகின்றது. வேறு வியாதிகளின் லிங்கமாக ஹிருதய வியாதிகள் ஆங்காங்கு நூல்களில் சொல்லப்பட்டிருக் கின்றன. ராஜயக்ஷ்மாவில் "பார்சுவவலி" என்றும், மதாத்யயத்தில் "ஹிருதயகண்டரோதம்" என்றும், மூர்ச்சாயத்தில் "ஹிருத்பீடா" என்றும்| அம்லபித்தத்தில் "ஹிருத்கண்டதாஹம்" என்றும், ஆநாஹத் தில் "ஹிருத்ஸ்தம்பம்" என்றும், மேலும் ஏப்பம், தாகம், காஸம், கண்ணீர், சிரமம், சுவாஸம், இவைகளை அடக்கிவிடுவதால்

உண்டாகும் நோய்களைச் சொல்லும் பொழுது "பலவித ஹிருதய நோய்கள்" என்றும் சொல்லப்பட்டிருக்கின்றன. அதிகம் சொல்லுவதென்ன? ஆமம், கபம், ரஸம், இவைகளை யொட்டிய வாதநோய்களில் அனேகமாகப் பல விதங்களான ஹிருதய நோய்கள் உண்டாவதாகக் கூறப்பட்டுள்ளன. ஹிருதயத்தை யொட்டிய ஓஜஸ்ஸும், சைதன்யமும் விகாரத்தை யடைவதாக உன் மாத ஸம்பிராப்தியில் வர்ணிக்கப்பட்டுள்ளது. ஹிருதயத்தில் உண்டாகும் வித்ரதிக் கட்டியான துஸர்வாங்கப்ரக்ரஹம், காஸம் இவைகளைச் செய்யுமெனச் சொல்லப்படட்டுள்ளது. இதுவும் ஹிருதய கர்ணிகையை நீக்கி மற்றவைகளையே ஹிருதயமெனச் சொல்லுவதால் பொருத்தமாகின்றது. கிருமிகளால் உண்டாகும் ஹிருத்ரோகமானது பித்தாதிகமான அன்னஸேவையால் உண்டாகின்றது. அந்நோயில் "மர்மஸ்தானத்தின் ஏகதேசத்தில் க்லேதத்தை ரஸம் அடைகின்றது. க்லேதத்தால் கிருமிகள் உண்டாகின்றன." என்ற சரகவசனத்தால் கிருமிகள் உண்டாவதற்கு அனுகூலமான கிரந்திகள், க்லேதம், இவைகள் ஹிருதய கர்ணிகையில் உண்டாவதாகச் சொல்லமுடியாது. அப்பேர்ப்பட்ட க்லேதத்தை உண்டு பண்ணும் தோஷப்பிரகோபத்திலேயே ஹிருதயத்திற்கு ஸ்தம்பமும் மரணமும் நேரிடுகின்றது. "மர்மைகதேசம்" என்ற வசனத்தால் மஹாமர்மமான ஹிருதயப் பிரதேசத்தில் ஹிருதய கர்ணிகையை பாதிக்காமலே இந்நோய் உண்டாவதாக ஸூசிப்பிக்கப்படுகின்றது. இவ்வசனத்தாலும் ஹிருதயமும் கர்ணிகையும் வேறென்பது புலனாகின்றது. ஹிருத்ரோக சிகித்சையும் நாம் கீழ் சொன்னதை உறுதிப்படுத்துகின்றது. "ச்யவனப்பிராசம் அகஸ்திய ரஸாயனம் ப்ராஹ்மரஸாயனம்" இவை முதலியவைகள் சுவாஸம், காஸம், பிரதிச்யாயம், ஆகிய நோய்களை விலக்க வல்லதாகக் கூறப்பட்டுள்ளன அவைகளே ஹிருதயரோக ஹரங்களாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இதுவும் சுவாஸநாளம் முதலிய அவயவக் கூட்டம் தான் ஹிருதயம் என்ற நமது கொள்கைக்கு அனுகூலமாகின்றது. சுவாஸ யந்திரத்தை யொட்டிய நோய்களில் பிரதானமாக ராஜயக்ஷ்மாவும் ஹிருதயரோகமே. ஆகிலும் ராஜயக்ஷ்மா என்ற நோயானது ஸர்வதாதுக்களிலும் வியாபிக்கும் திரிதோஷப் பிரகோபம், ஹேது,

ஸம்பிராப்தி இவை முதலியவைகளேயும் அனுசரித்துச்சிகித்ஸையைத் தனியாகச் சொல்ல வேண்டுமெனக் கருதி வேறு ரோகமாகச் சொல்லப்பட்டுள்ளது. சுவாஸம், காஸம், ஸ்வரஸாதம், பார்சுவவலி இவை முதலிய ஹிருதயத்தை யொட்டிய யக்ஷ்மரோகங்களில் ஹிருதயரோகத்தில் சொல்லப்பட்ட சிகித்சை மிகவும் சிலாக்கிய மெனத் தோற்றுகிறது. யக்ஷ்மரோக நிதானத்துடன் சேர்த்து ஹிருத்ரோகத்தைச் சொல்லியுள்ள வாக்படரால் யக்ஷ்மரோகமும் ஹிருத்ரோகமும் ஸமானயோகக்ஷேமம் எனச் சொல்லப்பட்டதாகிறது. ஹிருதாமயத்தில் அடங்கிய காஸம், சுவாஸம், முதலியன ஸம்பிராப்தி முதலிய பேதங்களேக் கொண்டு தனித்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. யக்ஷ்ம, காஸம், முதலியவை போக மீதியுள்ள ஹிருதயரோக லிங்கங்களின் சிகித்சைக்காகத் தனித்துச் சுருக்கமாக ஹிருதய நோயின் ஸம்பிராப்தி முதலியவை சொல்லப்பட்டிருக்கின்றன. எல்லா நோய்களிலுமே சிகித்சையின் சௌகரியத்திற்காக இந்தக் கிரமம் சாஸ்திரங்களில் காணப்படுகின்றது. எல்லா நோய்களுக்கும் திரிதோஷப் பிரகோபமே காரணமானது பற்றி ரோகங்களிலும் ஒன்றுக்கொன்று கொண்டுள்ள சம்பந்தத்தை யாரும் மறுக்க முடியாது. நவீன மதப்படி ஹிருதய கோசத்திற்கு வெளியிலும் உள்ளும் ஆவரணமாக அமைந்துள்ள ஜவ்வில் காணும் சோபம் முதலியவை (Pericarditis, Endocarditis) களே அதன் லிங்கங்களேக் கொண்டு நாம் ஹிருத்ரோகங்களில் பித்தஜங்களென சொல்லுகிறோம். ஹிருதய குஹையின் உள்ளே சுவற்றில் உள்ள ஜவ்வை யொட்டிய நோய் (Pleurisy) முதலியவைகளும் அவ் விதமே. இரைப்பையின் உள் வெளி பாகங்களே யொட்டிய சோபம், தாபம், க்ஷதம், ச்யுதி, முதலிய நோய்களும் (Gastritis) ஹிருத்ரோகமெனக் கொள்ளவேண்டும். இவ்விதம் நவீனமதம் பிராசீன மதம், இவைகளே யொட்டி ரோக நிர்ணயம் அப்பிரகிருதமாயும், அதிக கடினமாயும், மிக விரிவாகவும் இருப்பது பற்றி இத்துடன் நிறுத்துகிறோம். அடியில் சொல்லுவது தான் சித்தாந்தமாகும்—"நவீந விக்யானிகளும் லௌகிகர்களும் அனேகமாக ஹிருதயரோகமென (Heart Disease) வெகு காலமாக நிச்சயித்துப் பிரசித்தப்படுத்தியுள்ள வியாதி வேறு. சாஸ்திரங்களில்

சொல்லப்பட்ட ஹிருதய ரோய் வேறு. ஹிருதயத்தின் இருப்பிடம், ஸ்வரூபம், இவை முதலியவைகளில் வேறுபாடு காணப்படுவதால் இவ்விதம் வேறுபாடு காணுகின்றது. நவீனர்கள் கண்டுபிடித்துள்ள ஹிருதய ரோய்களோ வெனில் சாஸ்திரீயமான ஹிருதய ரோகத்திலும் யக்ஷ்மாதி ரோகங்களிலும் அடங்கியவைகளாகி ஹிருதய கர்ணிகையை யொட்டிய உபத்திரவங்களாகின்றன. ஆகவே வியவஹாரத்திற்காக இந்த ஹிருதயரோக பரீக்ஷை உபயோகப்பட்ட போதிலும் திரிதோஷப் பிரகோபங்களை யறிந்து ஆரம்பிக்கப்படும் ஆயுர்வேத சிகித்சையில் உபயோகப்படுவதில்லை யென்பது வியக்தம்." நவீன விக்யான நூல்களால் விளைந்துள்ள விபரீதம்—கடைசியாக இங்கு சொல்ல வேண்டிய விஷயத்தைச் சொல்லாமல் விட முடியவில்லை. ஆயுர்வேத நூல்களில் சொல்லப்பட்டிருக்கும் உறுப்புகளின் இடம், ரூபம், தொழில், ஆகிய இவைகள் சரியல்லவென்று நினைத்துச் சிலர் புராதன நூல்களில் காணப்படாததாயும் தாங்களாகவே கல்பித்துக் கொண்டதாயுமுள்ள சில பெயர்களையும் அவற்றின் வர்ணனங்களையும் கொண்டு நவீந நூல்களிலிருந்து கொண்டு வரப்பட்டும்தங்கள்சொந்த அபிப்பிராயங்களைக் கொண்டு கல்பிக்கப்பட்டுமுள்ள பல ஆபாசங்களைச் சேர்த்துச் சிடர்களுக்கு க்ஷேமம் செய்யவேண்டு மென்ற எண்ணத்துடன் பல புத்தகங்கள் எழுதியிருக்கின்றனர். எழுதவும் போகின்றனர். பிராசினர்கள் ஏற்படுத்தியுள்ள ஹேது லிங்க ஔஷதவியவஸ்தை சீர் குலைக்கப்படுகின்றது. நாகரீகம் பெற்ற நவீனர்களுக்கு அனுகூலமான இந்தச் சீர் கேட்டை பிரமத்தாலும் அக்யானத்தால் உண்டான ஓர் குதூஹலத்தாலும் நாமும் ஆமோதிக்கிறோம். இந்தச் சீர்கேட்டைக் கண்டு உண்மையில் நாம் வியசனிக்கவேண்டும். "விஷ்ணுபதாமிருதபானம்" துடங்கி ஆரம்பித்துக் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்துள்ள தோஷம் அங்கப் பிரத்யங்கங்களுடைய அளவு இருப்பிடம், ஸ்வரூபம், தொழில், ஆகிய இவைகளில் சம்பந்தித்தது போலவே சாஸ்திரங்களாலேயே அறியவேண்டிய மற்ற விஷயங்களிலும் மாறுபாட்டை உண்டு பண்ணிக்கொண்டு நவீன விக்யானப் பிசாசங்களால் பீடிக்கப்பட்ட ஆயுர்வேத ஹிருதயத்தை கலக்குகின்றது. இவ்விஷயத்தில் ஓர்

உதாஹரணம் காட்டுவோம். விநோதலால்சேன் அவர்கள் முதலில் செய்துள்ள "ஆயுர்வேத விக்யானம்" என்ற நூலில் "ஹிருதயம் நான்கு அரைகளுடன் கூடியது. வலது பக்கத்தில் இரண்டு அரைகளும் இடது பக்கத்தில் இரண்டு அரைகளும் இருக்கின்றன. அவைகளுள் வலது பக்கத்து அரைகள் அசுத்த ரக்தத்தை ஏற்று அதைச் சுத்திசெய்து ஸிரா என்ற ரக்தக்குழாய்கள் மூலமாக புப்புஸம் என்ற நுரையீரல்களுக்குச் செலுத்துகின்றது. அங்கு சுத்தியான ரக்தம் இடது பக்கத்து அரைகளுக்குச் செல்லுகின்றது அங்கிருந்து ரக்தம் சரீரம் முழுவதும் சென்று சரீரத்திற்குப் போஷணை யுண்டுபண்ணி ஜீவிக்கச் செய்கிறது." இவை முதலிய வசனங்களால் சாஸ்திரீயம் என்ற பெயரைக் கொடுத்து வர்ணிக்கப் பட்ட ஹிருதயம் முதலியவைகளின் இருப்பிடம், தொழில், முதலிய வைகள் முதல் முதலில் ஆயுர்வேதத்தில் சொல்லப்பட்டுப் பிறகு நவீனர்களால் எடுத்துக் கொள்ளப்பட்டதென்று ஜனங்கள் நினைக்கும்படி யிருக்கின்றன. ஹாராண சந்திரசக்ரவர்த்தி என்பவர் செய்துள்ள "சுசுருதார்த்தஸந்தீபனம்" என்ற வியாக்யானத்தில் கீழ்ச் சொன்ன விஷயங்களை வாய் விட்டுச் சொல்லித் தூங்கும் பொழுதும் விழித்திருக்கும் பொழுதும் ஹிருதயத்தில் உண்டாகும் ஸங்கோச விகாஸங்களை அடியிற்காணுமாறு நிர்வகித்திருக்கின்றனர். "ஹிருதயம் அடிக்கடி ஸ்பந்தனம் செய்கின்றது. விழித்திருக்கும் பொழுது ஹிருதயம் விசேஷித்து வேலை செய்வதாலும் ரக்தவேகம் மிகுந்திருப்பதாலும் சற்று விகஸிப்பது போல தோன்றுகிற தென்று ஓர் வழியாக உபதேசிக்கின்றூர். "ஜாக்ரத:" என்று. 'நிமீலதி' என்பது தொழில் சற்று மந்தப்படுவதால் ரக்தவேகம் குறைந்து ஹிருதயம் சுருங்குவது போல இருக்கின்றது என்று பொருளைக் கொடுக்கின்றது." என்று உரை எழுதியிருக்கிறூர். இந்தப் பெரியோர் பௌதிக விக்யானத்தால் மோதுண்ட ஹிருதயத் திற்கு சாஸ்திர சித்தமான சேதநாஸ்தானத்வத்தைக் கூட அங்கி கரிக்காமல் வியாக்கியானாபாசங்களைச் செய்து சிரமப்படுகிறூர். புப்புஸம், க்லோமம், முதலிய உறுப்புகளிலிருந்து ஹிருதயத்தைத் தனிப்படுத்தி விட்டனர். சாஸ்திரங்களை யறிந்த இவர்களே நவீன விக்யான மோஹத்தால் இவ்விதம் சாஸ்திரார்த்தங்களை

அலக்ஷியம் செய்து விட்டனர். பிராசீன நவீன மதங்களை நன்றாக அறிந்த மற்றும் சில பண்டிதர்கள் நமது சாரீரம் ஹீநமித்யா யோகங்களால் தூஷிதமென்றும், அத்யாத்ம விஷயத்தில் அதி யோகம் கொண்டதென்றும் நினைத்தவர்களாகப் பெயர் கலப்பு, அர்த்தங்கள் பொருந்தாமை பிரகூிப்தச்சேர்க்கை, மிகுந்த தவறுதல் ஆகிய இவைகள் இருப்பதாக நினைத்துத் துக்கித்தவர்களாய் நவீன மதப்பற்றுமிகுந்து "சாரீரத்தில்சுசுருதர்ஙஷ்டர்" என்று வாய்விட்டுச் சொல்லுகின்றனர். இவ்விதம் நமது ஆர்ய சாரீரம் தனது நேயர்களாலேயே தள்ளப்பட்டு அஸ்தானத்தில் விபத்தை யடைகின்றது. பாபம் இங்கு நாம் சற்று கவனிக்க வேண்டும். சரக சாரீரம் எழாவது அத்தியாயத்தில் நாபி, ஹிருதயம், முதலிய 15 கோஷ்டாங்கங்களையும் "உகாச்லேஷ்ம பூகர்ணபுத்ரிகாதிகளான" 56 பிரத்யங்கங்களையும் சொல்லிக் கடைசியில் "இவ்வளவு தான் கண்களுக்குப் புலப்படக் கூடியது சொல்ல முடிந்தது, இதற்குமேல் ஊகித்துக் கொள்ள வேண்டியது" என்றும் ஸ்நாவ 900 என்ற கணக்கும் ஊகத்தால் அறியக்கூடியவை "ஜலம் முதலியவைகளில் அஞ்சலிக் கணக்கும் ஊகித்து அறியக்கூடியதே" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வசனத்தால் சவபரீக்ஷையும் கண்களால் அறியக்கூடியது, ஊகத்தால் அறியக்கூடியது என்று இருவிதமெனத் தெரிகிறது. சாஸ்திர தத்வத்திற்கு விரோதமில்லாமல் அதிகமான அம்சங்களைப் பிரத்யக்ஷமாக அறிந்தாலும் ஊகத்தால் அறிந்தாலும் பிரத்யக்ஷபரீக்ஷையால் அதிகமான உபாங்கங்களை அறிந்தாலும், அவை வரவேற்கத் தக்கவையே. ஆகவே பிரத்யக்ஷ சாரீரம் முதலிய நூல்களை யெழுதியவர்கள் மிகுந்த உபகாரிகளென்று அவர்களுக்கு தந்யவாதம் சொல்ல நாம் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் "எக்தெந்த உறுப்புகளை முன் கணக்கிடும் பொழுது சொல்லவில்லையோ அவைகள் வேறு பர்யாயங்களால் பிரகாசப் படுத்தப்படும்" என்று ஆசாரியர் சொன்ன விஷயத்தை இவர்கள் ஆதரிப்பதில்லை என்று அறிகிறோம். இவர்கள் ஹிருதயாதி சப்தங்கள் நூல்களில் எந்தப் பொருளைக் குறிப்பதாகக் காணப்படுகின்றனவோ அந்த சப்தங்களுக்கு அந்த பொருளைத் தள்ளி வேறு பொருளைக் குறிப்பதாகக் கொண்டிருக்கின்றனர். நவீனக் கொள்

கையை யொட்டிய பரிபாஷையால் அவைகளின் பிரவிருத்தி நிமித்தம் பொருந்தவில்லை என்று தெரிந்தும் கூட கிரமமாகப் பெருகியுள்ளப் பிராசின ஸம்ஸ்கார தோஷம் இங்கு பரிகரிக்க முடியாமலே போய்விட்டது. மிக மேன்மையானப் பிராசீன மதம் இப்பொழுது கேவலம் திருச்யத்தை மாத்திரம் போதிப்பதாக ஓதுக்கப்பட்டுப் போகவே அது அனேகம் சந்தேகங்களையும் அனேக விபரீதார்த்தங்களையும் போதிப்பதாக ஆகி மறுபடியும் சீர்மை பெருவது துர்லபமாகும்படி அதன் ஸந்நிவேசமே குலையும்படி இருக்கின்றது. ஆகவே தத்காலம்பிராசீன மதத்தை யவலம்பித்துள்ளவரைப் பார்த்து "மூர்த்நாகச்சதி' என்று சொல்லும்படி இந்த நவீன மதப்பற்று பண்டிதர்களையும் பேசும்படி தூண்டுகிறது. "மூர்த்நா கச்சதி" என்ற பண்டித வசனத்தில் "மூர்த்நா" என்பதற்கு "புத்தியால்" என்றோ அல்லது லக்ஷணையால் "உத்தமமான வழியால்" என்றோ பொருள் கொண்டு நாம் சந்தோஷிக்கிறோம். (கமனரூபமான கிருதியில் திருதீயாந்த மான மூர்த்நா கரணமாக அந்வயிக்காமலிருப்பதால் தாத்பர்யானு பபத்திவியக்தம்) இவ்விதம் நவீன மதவாஸனை பெற்ற மாணாக்கர்களின் மனது சாஸ்திரோக்தமான ஹிருதயத்தைப் பரீக்ஷித்து அப்பதத்திற்குப் பொருள் என்னவென்பதைக் கண்டு பிடிப்பதில் தளர்ச்சி யடைந்து விடுகிறது. நவீனர்கள் பிரத்யக்ஷ மாகக் கண்ட விஷயங்களுக்குத் தக்கபடி பெயர், லக்ஷணம், இவைகளைத் தாங்களே சாஸ்திரீயப் பெயர்களை கலக்காமல் கல்பித்துக் கொண்டு இருப்பார்களோயாகில் இவ்வளவு நீண்ட விசாரமே உதித்திராது.

(1) மாபூதாகம பீடேதி பரிமேய பராக்த்ருசா | ஏவம் மிருது மயாக்ராத மாயுர்வேத ஹ்ருதம் புஜம் || இதன் பொருள்—விஸ்தார மாக ஹிருதயரோக விசாரம் என்ற உபன்யாசம் செய்து முடிவில் உபன்யாசகர் மூன்று சுலோகங்களால் உபஸம்ஹாரம் செய்கிறார். அந்த மூன்று சுலோகங்களுள் இது முதல் சுலோகம். இதில் பல அர்த்தங்கள் பொதிந்து இருக்கின்றன. ஆகவே இச்சுலோகத்தை மொழிபெயர்த்தால் கருத்து நன்கு விளங்காது. ஆனது பற்றி தாத்பர்யத்தை வெளியிடுகிறோம். உலகத்தில் ரஸிகர்கள் அருமை

யான புஷ்பங்களை வாடவிடாமல் நாசூக்காக முகர்ந்து வாசனையை யனுபவிப்பது வழக்கம். அது போலவே உபன்யாசகர் ஆயுர்வேத ஹிருதயமாகிற தாமரைப் புஷ்பத்தை அதன் அழகு கெடா மலிருக்கும்படி ஜாக்கிரதையாக மெதுவாக முகர்ந்து அனுபவித்தார். இரண்டு வழிகளால் புஷ்பத்தின் அழகு கெடும். சாக்ஷுஷ தேஜஸ்ஸின் சம்பந்தம் ஒரு காரணம். இரண்டாவது காரணம் மூச்சுக்காற்று சம்பந்தப்படுவது. இந்த இரண்டு வித பீடா காரணங்கள் அணுகாமலிருக்கும்படி ஜாக்கிரதையாகவே யிருப்பார் ரஸிகர். புஷ்பங்களை இதழ் இதழாக ஒற்றுப் பார்ப்பதும் நன்ருக மூச்சுக்காற்று படும்படி ஆழ்ந்து முகர்வதும் விலக்கப்பட வேண்டும். "பரிமேய பராக்த்ருசா" பரிமேயம் என்பது பிரமேய மாகி ஒவ்வொரு இதழாக ஆராய்ந்து பார்ப்பதைக் குறிக்கின்றது. "பராக்த்ருசா" என்பது அவ்விதம் ஆராய்ந்து பார்க்காமல் மேலெழுந்த வாரியான பார்வையைக் குறிக்கின்றது. புஷ்பத்தின் அவயவாவயவிகளை ஆராய்ந்து பார்த்து சாக்ஷுஷதேஜஸ்ஸால் பீடை யுண்டாகா வண்ணம் ஸ்தூல திருஷ்டியால் பார்த்து என்பது மொத்தப் பொருள். இது முதல் அர்த்தம். இந்தச் சுலோகத்திற்கு இரண்டாவது அர்த்தமாவது—ஹிருதயம், புப்புஸம், க்லோம, ஆமாசயம், என்ற உறுப்புகளை மேலெழுந்த வாரியாக அதாவது ஆழ்ந்து பாராமல் ஆழ்ந்து ஆராய்ந்தால் ஆகமபீடை யுண்டாகலாம் என்று நினைத்து ஆயுர்வேத ஹிருதயத்தை இலேசாக வெளி யிட்டார். இந்த அர்த்தத்தில் உபன்யாசகரின் நைச்யம் ஸ்புரிக் கின்றது. தன்னுடைய சிற்றறிவைக் கொண்டு அதிகம் ஆழ்ந்து ஆராய்ந்தால் ஆகமபீடை யுண்டாகுமோ வென்று நினைப்பது இங்கு நைச்யமாகும். இச்சுலோகத்திற்கு மூன்ருவது அர்த்தமு முண்டு. அதாவது—ஆழ்ந்து ஆராய்ந்தால் சாஸ்திரங்களில் முன்னுக்குப் பின் முரண்பாடு பல வெளியாகுமாதலால் அது கூடாதென இவ்வளவே சொன்னேம் என்பது.

இரண்டாவது சுலோகம்—பூர்வீகர்களின் (முன்னேர்களின்) பக்ஷத்தை (மதத்தை) யொட்டி வெளிவந்துள்ள என் உபன் யாசத்தை நவீனர்கள் பூர்வபக்ஷமாக (கண்டிக்கத் தகுந்தாக) நினைத்தால் ஆச்சரியமில்லை. மூன்ருவது சுலோகம்—ஸ்ரீநீலகண்டர் என்ற குருத்தமரின் பாதபத்மங்களிலிருந்து பெருகும் தேன் அலைகளால் குளிர்ந்த நாராயணன்என்றபெயருள்ளஉபன்யாசகரால் ஹிருத்ரோக வர்ணனத்தை யொட்டி ஹிருதயத்தைப் பற்றிய விசாரம் செய்யப்பட்டது. சுபம்.

210205



சித்தர் முறை. (பண்டிட் நாராயணய்யங்கார்,

7. அஞ்சனக்கல்—இது பூமியில் கிடைக்கும் பிறவிச்சரக்கு. சாதாரணமாகக் கடைகளில் கிடைக்கும். இதை ஹிந்தியில் ஸுரமா என்றும் ஆங்கிலத்தில் Antimony என்றும் சொல்லுகின்றனர். இது ஆங்கிலத்தில் ஔஷதமுறைகளில் சேருகின்றது. Kalaazar என்ற ஓர் நோயில் இதை இன்ஜக்ஷன் செய்வதில் மிகுந்த பலன் காணுவதாகச் சொல்லப்படுகின்றது. தமிழிலும் அஞ்சனக்கல் என்றே அழைக்கின்றனர். நமது நூல்களில் இதன் உபயோகம் மிகக்குறைவாகக் காணப்படுகின்றது. நூல்களில் இந்த அஞ்சனக் கல் ஐந்து விதமாகக் கூறப்படுகின்றது. சௌவீராஞ்ஜனம், ரஸாஞ்ஜனம், ஸ்ரோதோஞ்ஜனம், புஷ்பாஞ்ஜனம், நீலாஞ்ஜனம், எனப்பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் ரஸாஞ்ஜனம் என்பது நமது நூல்களில் பல முறைகளில் சேர்ந்து உள்ளுக்கும் வெளிக்கும் உபயோகப்படுகின்றது. பிறவிச்சரக்கு மஞ்சள் நிறமாக விருக்குமென நூல்களில் சொல்லப்படுகின்றது. ஆனால் விளைவுச் சரக்கான ரஸாஞ்ஜனம் நமக்குத் தக்காலம் கிடைப்பதில்லை. ஆகவே அதற்குப் பதிலாக ரஸாஞ்ஜனத்தைச் செயற்கை முறையில் தயாரித்து வடதேசக் கடைகளில் விற்கின்றனர். ரஸாஞ்ஜனம் செயற்கைமுறை—மரமஞ்சளை இடித்துக் கஷாயம் செய்யவேண்டும். அதாவது இருபது தோலா மரமஞ்சளை இடித்துச் சின்னப்படி இரண்டரைப்படி சுத்தஜலம் விட்டு அடுப்பேற்றி நான்கில் ஒன்றாக வற்றவைத்து வடிகட்டி இரும்பு பாத்திரத்தில் அக்கஷாயத்தை அரைக்கால்படி ஆட்டுப்பாலுடன் சேர்த்து அடுப்பேற்றி மெழுகாக ஆகும் வரை எரித்து எடுத்து பத்திரப்படுத்தவும். இதுவே ரஸாஞ் ஜனம் சேரும் முறைகளில் உபயோகிக்கப்படுகின்றது. அஞ்சனக் கல் முழுவதுமே கண்நோய்களில் மேலுக்கு உபயோகிக்கப்படு கின்றது. அதிலும் விசேஷித்து ரஸாஞ்ஜனம் உபயோகிக்கப்படு கின்றது. மேலும் இந்த ரஸாஞ்ஜனம் அதிசார நோய்கள், ரக்தப் பெருக்கு இவைகளில் பல கூட்டுமருந்துகளுடன் சேருகின்றது. தக்காலம் கடைகளில் கருப்பு, வெளுப்பான அஞ்சனக்கல் கிடைக் கின்றது. இவற்றிற்கு முறையே நீலாஞ்ஜனமென்றும் ஸௌவீராஞ்

[stamp]

ஜனம் என்றும் பெயர். மற்றவைகள் கிடைப்பதில்லை யாகையால் அவைகளை லக்ஷணங்களுடன் நாம் எழுதவில்லை. நீலாஞ்ஜன சௌவீராஞ்ஜனங்களின் சுத்தி—நீலாஞ்ஜனத்தைப் பொடிசெய்து எலுமிச்சம்பழ ரசத்தில் ஓர் பாவனை செய்து கடும்வெய்யிலில் ஒரு நாள் காயவைக்கச் சுத்தியாகும். கரிப்பான் ரசத்தில் பாவனை செய்ய இருவித அஞ்சனமும் சுத்தியாகும். குறிப்பு—வனகுலித் தாஞ்ஜனம் என்ற ஓர் வித அஞ்சனக்கல் வடதேசங்களில் "சாகஸூ" என்றும் "சிமிட" என்றும் இருபெயர்களுடன் கடைகளில் கிடைக்கின்றது. அதை நன்றாகப் பொடிசெய்து வஸ்திரகாயம் செய்து கண்களிலிட குழந்தைகளின் கண்நோய் சௌக்கியமாகும். இதைப் பஸ்மம் செய்யும்படி நூல்கள் கூறவில்லை.

8. கங்குஷ்டம்—கங்குஷ்டம் என்பது ஓர் விதக்கல் போன்ற கட்டியான வஸ்து உத்தர தேசங்களில் கிடைகின்றது. இதற்குத் தமிழில் பெயர் கிடையாது. இது பேதியாகும் குணமுள்ளது. மஞ்சள் நிறமானது. ஹிமயமலையின் சுற்று மலைகளில் உண்டாவதாக நூல்கள் கூறுகின்றன. இதன் சுத்தி—சுக்கு கஷாயத்தில் மூன்று பாவனை செய்யச் சுத்தியாகும். குறிப்பு—இது சில மருந்துகளில் கூட்டுமருந்தாகச் சேருகின்றது. பிரசித்தமான நாராயண சூர்ணத்தில் இது ஓர் சரக்காகச் சேருகின்றது. இதைத் தனித்துக் கொடுப்பதில்லை. இவ்விதம் உபரஸங்கள் எட்டும் சொல்லி முடிந்தது. இனி சாதாரண ரஸங்கள் ஒன்பதென முன் சொன்னோம். அவையாவன—கம்பில்லம், பாஷாணம், நவாச்சாரம், சோகி, அக்னிஜாரம், கிரிசிந்தூரம், லிங்கம், மிருதார்சிங்கு, ராஜாவர்த்தம், ஆகிய இவைகளே. இவைகளின் லக்ஷணங்களை இனிச் சொல்லுவோம்.

1. கம்பில்லம்—கம்பில்லமென்பது ஓர் பிறவிச் சரக்கு. இது செங்கல்பொடி போன்று நிறத்துடனும் பொடியாகவுமிருக்கும். இது வாய்விளங்கத்தின் புஷ்பப்பொடியென சொல்லப்படுகின்றது. அது சரியல்ல. ஏனெனில் "ஸௌராஷ்ட்ரதேசே சோத்பன்ன:" என்று இவ்வஸ்து ஸௌராஷ்டிர தேசத்தில் விளைவதாக நூல்களில்கூறப்பட்டிருக்கின்றது. வாய்விளங்கமரம் இந்தியா முழு

வதும்காடுகளில் இருப்பதால் சௌராஷ்ட்ர தேசத்தில் விளைவதாகச் சொல்லுவது பொருந்தமாட்டாது. இது பேதிச்சரக்கு. தனியாகக் கொடுப்பதில்லை. பல மருந்துகளில் கூட்டுச் சரக்காகச் சேருகின்றது. இதற்கு சுத்தி சொல்லப்படவில்லை யாதலால் அப்படியே மருந்துகளில் சேர்த்துக் கொள்ளவேண்டும். நாராயண சூர்ணத்தின் சரக்குகளில் இதுவும் சேருகின்றது.

2. பாஷாணம்—இது விளைவுச் சரக்கு. தக்காலம் நமது கடைகளில் வைப்புச் சரக்குதான் ஏராளமாகக் கிடைக்கின்றது. சில சமயங்களில் பிறவிச்சரக்கும் கிடைக்கின்றது. பிறவிச்சரக்கு இந்துப்பு நிறமாகச்சற்றேறக்குறைய இருக்கும். இதில் பல பேதங்களுண்டு அவற்றுள் வெள்ளைப் பாஷாணமும் கௌரிபாஷாணமும் முக்கியமாகும். சங்கு பாஷாணம் என்ற ஓர் வகையும் நமது கடைகளில் கிடைக்கின்றது. வெள்ளைப்பாஷாணத்திற்கும் சங்கு பாஷாணத்திற்கும் நிறத்தில் சற்று பேதமுண்டு. வெள்ளைப் பாஷாணம் பல மருந்துகளில் கூட்டுச்சரக்காகச் சேருகின்றது. இதைத் தனித்தும் கொடுக்கலாம். கௌரீபாஷாணமும் இவ்விதமே. இது மஞ்சள் நிறமாக இருக்கும். பாஷாணங்கள் தமிழ் நூல்களிலும் விரிவாக வைப்பு முறையுடன் சொல்லப்பட்டிருக்கிறன. வெள்ளைப்பாஷாணம் ஆங்கில வைத்தியத்தில் மிகவும் உபயோகமாகின்றது. சிகப்புப்பாஷாணம், கருப்புப்பாஷாணம், என்ற இருவகை வடதேசங்களில் கடைகளில் விற்கப்படுகின்றன. அவற்றைப்பற்றிய விவரம் நூல்களில் காணப்படவில்லை. ஆனால் அவை வழக்கத்தில் உபயோகப்பட்டு வருகின்றன. பாஷாணம் முக்கியமாகக் காய்ச்சல்களில் உபயோகமாகின்றது. முறைக்காய்ச்சல்களில் குவைனவுக்கு அடுத்தபடியாகக் குணம் கொடுக்கின்றது. குவைன ஒத்துக்கொள்ளாத சரீரங்களில் வெள்ளைப்பாஷாணம் பயன்படுகின்றது. பாஷாணங்களின் சுத்திமுறை—இப்பாஷாணங்களைச் சுண்ணும்பு நீரில் தோலா யந்திரமாகக்கட்டி ஒரு யாமம் எரிக்கச் சுத்தியாகும். பாஷாணங்களில் வெள்ளைப்பாஷாணம் மாத்திரம் பஸ்மம் செய்ய சாத்தியமாகின்றது. மற்றவைகளைப் பஸ்மம் செய்யும் முறை தெரியவில்லை. வெள்ளைப்பாஷாணம்

பஸ்மம் செய்யும் முறையை ஔஷதசாரத்தில் பார்க்கவும். நூல்களில் கௌரீபாஷாணம் என்று பொதுப்பெயர் கொடுக்கப்பட்டு அதன் பேதங்களாக பளிங்கு பாஷாணம், சங்குப்பாஷாணம், மஞ்சள் பாஷாணமென்றும் மூன்று பாஷாணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் வியவஹாரத்தில் மஞ்சள் பாஷாணத்தைக் கௌரீபாஷாணமென்றும் மற்றவைகளை அதன் பெயர் கொண்டும் அழைக்கின்றனர். மஞ்சள் பாஷாணத்தை விட சங்கு பாஷாணம் உயர்ந்ததென்றும் அதைவிட பளிங்கு பாஷாணம் உயர்ந்ததென்றும் நூல்களில் கூறப்படுகின்றது.

3. நவாச்சாரம்—இது சாதாரணமாகக் கிடைக்கக்கூடிய ஓர் உப்பாகும். இதை ஆங்கிலத்தில் அமோனியம் என்ற பெயருடன் பலவித உப்புகளாகவும் ஜயநீராகவும் செய்து உள்ளுக்கு உபயோகிக்கின்றனர். நமது நூல்களில் இதற்கு விசேஷித்து உபயோகம் காணப்படவில்லை. ரஸபஸ்மம் எரிப்புகளிலும் தேள் மருந்துகளிலும் இது சேருகின்றது. மற்றப்படி உள்ளுக்கு உபயோகப்படும் மருந்துகளில் இது கூட்டுமருந்தாகவோ அல்லது தனித்தோ சேருவதாகக்காணப்படவில்லை. ஸ்வர்ணவங்கம் போன்ற ரஸபஸ்மம் எரிப்புகளில்இது கூட்டுமருந்தாகச் சேரும்பொழுது தங்கநிறமும் ஓர்பளபளப்பும் ரஸத்த்திற்குக் கொடுக்கின்றது.

4. சோகி—இதைப் பலகரை என்றும் சொல்லுவார்கள். சுமார் அரைத்தோலா இடையுள்ள சோகி உத்தமமாகும். அதோடு நடுமுதுகில் மஞ்சள் நிறமாக இருப்பது உத்தமம். இது பல மருந்துகளில் கூட்டுச்சரக்காகச் சேருகின்றது. தனித்தும் உபயோகமாகின்றது. ஆயுர்வேத நூல்களில் இதற்கு மெத்த உபயோகம் காணுகின்றது. தமிழ் நூல்களில் இதன் மதிப்பு அதிகம் காணவில்லை. "ரிதே குஷ்டம் ரக்தபித்தம் அந்யான் ரோகான் விநாசயேத்" குஷ்டம், ரக்தபித்தம், என்ற இரு நோய்கள் நீங்கலாக மற்ற நோய்கள் அனைத்திலும் இது குணம் கொடுக்கும் என்பது இவ்வசனத்தின் பொருள். அதிசாரம், கிரஹணீ, காசம், க்ஷயம், ஆகிய இந்நோய்களிலும் விசேஷித்து சூலர், பரிணாமசூலம், ஆகிய நோய்களிலும் இது மிகுந்த நன்மை செய்கின்றது. இந்நோய்களில்

இச்சரக்கு சேராத கூட்டுமருந்தே கிடையாதெனக் கூடச் சொல்ல லாம். இதன் சுத்தி—எலுமிச்சம்பழ ரசத்தில் ஒரு நாள் ஊரப் போட்டு எடுக்கச் சுத்தியாகும். குறிப்பு—இதைப் பஸ்மம் செய் யும்படி நூல்களில் கூறுவிட்டாலும் கூட நமது அனுபத்தில் இப் பஸ்மம் நல்ல குணம் கொடுக்கின்றது. பஸ் ம் செய்யும் முறை— எலுமிச்சம்பழ ரசத்திலே அரைத்து பில்லேசெய்து காயவைத்து ஓர் அகலில் வைத்து மேல் அகல் மூடி வாய்க்குச் சீலேமண் செய்து வராஹபுடமிட பஸ்மமாகும். சில சமயங்களில் எலுமிச்சம்பழ ரசத்தால் அரைப்பும் சுத்தியும் குறைந்திருந்தால் நல்ல பஸ்மம் ஆகாமல் கொஞ்சம் சுன்னம் அம்சம் கலந்திருக்கும். அதை உள்ளுக்கு உபயோகிப்பதில் குற்றமில்லே. எலுமிச்சம்பழ ரசத்தால் நன்ருக பாவனே செய்த பிறகு அதாவது சோகிகளே நன்ருகப் பொடிசெய்து ஷெ ரஸத்தால் 3—4 நாட்கள் பாவனேயும் செய்து பிறகு பில்லேதட்டிக் காயவைக்க வேண்டும். இவ்விதம் செய்தால் சரியான பஸ்மமாகும். இதை உசிதமான அளவில் குழந்தை முதல் பெரியோர்கள் வரை தேன் முதலிய அனுபானங்களில் கொடுக்கலாம்.

5. அக்னிஜாரம்—இது கஸ்தூரி போன்று ஓர் ஜந்துவினிடத் தில் உண்டாகும் வஸ்துவாகும். அக்னிநக்ரம் என்ற ஜலஜந்துவின் ஜராயுவில் உண்டாகும் ஓர் உப்பென நூல்கள் கூறுகின்றன. இதுவே தமிழிலும் ஹிந்தியிலும் அம்பர் எனப்புகழப்படும் வஸ்து வாகும். தமிழ் நூல்களில் இதைப்பற்றிய பிரஸ்தாபம் இல்லே. ஆயுர்வேதத்திலும் இது மருந்துகளில் கூட்டுமருந்தாகச் சேரவில்லே. கஸ்தூரி போல் இது விலேபெற்ற சரக்காகையால் பலர் இதைக் கையாளுவதில்லே. யூனனி வைத்தியத்தில் இது மிகவும் உபயோக மாகின்றது. இது பிறவியிலேயே சுத்தமானதால் இதற்குச் சுத்தி தேவையில்லே. கஸ்தூரி போலவே இதைத் தனித்துக் கொடுக்கலாம். தனுர்வாதம் முதலியவைகளில் நன்மை செய்யும். பிராணன் ஒடுங்கும் காலங்களில் ஹிருதய பலத்தை அதிகப்படுத்த இது உதவுகின்றது. ஜன்னி முதலியவைகளில் இது நன்மை யளிக் கின்றது. அம்பர் என்பது யூனனிச் சரக்கென்றும் ஆயுர்வேதத் தில் இது கிடையாதென்றும் பலருடைய எண்ணம். இது சுத்தப்

பிசகு. அக்னிஜாரம் என்பது அம்பர் எனத்தெரிந்து கொள்ளாதது நமது குறையாகும்.

6. கிரிசிந்தூரம்—மலைகளில் பெரிய பாறைகளின் அடியில் ரஸம் தங்கி அது சூரியவெப்பம் முதலியவைகளால் நீந்து பிறவியில் சிந்தூரமாகும். இதை கிரிஸிந்தூரமென நூல்கள் கூறுகின்றன. இந்த வஸ்து தற்காலம் எங்கும் கிடைப்பதில்லை. ஆகவே இதைப் பற்றி நாம் அதிகம் தெரிந்து கொள்ள முடியவில்லை. ரஸ சிந்தூரத்தின் குணமே இதற்குமுண்டு. இது கூட்டு மருந்துகளில் சேரக்காணவில்லை. கடைகளில் கிடைக்கும் ஈபசிந்தூரம் என்பது வேறு வஸ்துவாகும்.

7. லிங்கம்—இது சாதாரணமாக எல்லாருக்கும் தெரிந்த வஸ்து. கடைகளில் கிடைக்கும். இதிலிருந்து வாலைரஸம் எடுக்கலாம். இதன்சுத்தி—இஞ்சிரஸம், எலுமிச்சம்பழரஸம், இவைகளில் ஏதாவது ஒன்றால் ஏழு தடவை பாவனை செய்து உலர்த்திக் கொள்ளச் சுத்தியாகும். சுத்த லிங்கத்தைத் தேவையானவளவு எடுத்து அதில் பாதியிடை அரத்தாள் சேர்த்து நன்றாகக் கலந்து பொடிசெய்து ஓர் சட்டியில் போட்டு மேலுக்கு ஓர் சட்டி மூடி சந்து வாய்க்குச் சீலைமண் செய்து காயவைத்து அடுப்பேற்றி 12 மணி எரித்து ஆறவிட்டு எடுத்துப் பார்த்து மேல் சட்டியில் பதங்கித்திருக்கும் ரஸத்தை வழித்து எடுத்துக் கொள்ளவும். இந்த ரஸம் சுத்தமானது. ஆகவே கடைரசத்திற்குச் செய்ய வேண்டிய சுத்தி இதற்குத் தேவையில்லை. சட்டியில் போடும் லிங்கத்தின் இடையில் முக்கால் இடை ரஸம் காணும். ஆனால் சில லிங்கங்களில் சத்து குறைவாயிருந்தால் இந்த இடை காணாது. பாதியிடை காணும். குறிப்பு—அயம் முதலியவைகளைச் சிந்தூரம் அல்லது பஸ்மம் செய்ய வேண்டியிருந்தால் கீழே சொன்னபடி லிங்கத்துடன் சேர்த்துச் சட்டியில் போட்டு மேல் சட்டி மூடி முன்போல சீலைமண் செய்து முன்போல எரித்து ஆறவிட்டு எடுத்து மறுபடியும் புதிய லிங்கம் சேர்த்து முன்போல எரிக்கவும். இவ்விதம் மொத்தம் ஏழு தடவை செய்ய உயர்ந்த பஸ்மமாகும். இவ்விதம் செய்வதில் நமக்கு வாலைரஸமும்

கிடைத்து விடுகிறது. வேண்டிய உலோகமும் பஸ்மமாகி விடுகின்றது. லிங்கத்தைப் பலவிதமாகப் பஸ்மம் செய்கின்றனர். ஆயுர்வேத நூல்களில் எரிப்பு முறையில் ஓர் பஸ்மமுறை சொல்லப்பட்டிருக்கின்றது. சில வைத்தியர்கள் லிங்கவெள்ளை என்ற பெயருடன் லிங்கத்தை ஓர் வழியாக வெளுப்பாகச் செய்கின்றனர். ஜபநீரைக் கொண்டு அரைத்து லகுபுடமிடுவதில் இவ்விதம் வெளுப்பு நிறமுண்டாகின்றது. பல மெழுகுகளில் லிங்கம் கூட்டு மருந்தாகச் சேருகின்றது. பொதுவில் தமிழ் நூல்களில் இதன் உபயோகம் சற்று அதிகமாகக் காணுகின்றது. பல வைத்தியர்கள் லிங்கசிந்தூரத்தைத் தனியாகச் செய்து காய்ச்சலில் விசேஷித்தும் மற்றும் வாதநோய்களிலும் உபயோகிக்கின்றனர். உண்மையில் லிங்கசிந்தூரம் சாதாரணக் காய்ச்சல்களில் நன்மை செய்கின்றதேயன்றி பலமான காய்ச்சல்களில் சற்றும் பயன்படுவதில்லை. ஆனல் கூட்டுமருந்தாகச் சேர்ந்து பல காய்ச்சல்களில் விசேஷ குணம் கொடுக்கின்றது. உதாஹரணமாக வெள்ளைப்பாஷாணம் அல்லது கௌரீபாஷாணம் வத்ஸநாபிக்கிழங்கு, வீரம், பூரம், இவைகளுடன் சேர்ந்து ஜன்னிக் காய்ச்சல்களில் விசேஷ குணம் கொடுக்கின்றது. இதைத் தனித்து ஒடி வியாதிகளில் கொடுப்பதில் குணம் கிடைப்பதில்லை. லிங்கசிந்தூரம் செய்யும் முறை—ஓர் மண் சட்டியில் பாதியளவு சேங்கொட்டைகளை இரண்டாக நறுக்கிப் போட்டு அதன் நடுவில் லிங்கத்தை ஒரே கட்டியாக வைத்து அதன் மேல் சட்டி நிறைய சேங்கொட்டைகளை நறுக்கிப் போட்டு வாய் மூடாமல் அடுப்பேற்றி எரிக்க சில மணிகளில் தீப்பற்றி எரிந்து விடும் பிறகு ஆறவிட்டு லிங்கக்கட்டியை எடுத்துக் கல்வத்தில் நன்ருகப் பொடிசெய்து வைத்துக்கொள்ளவும். இரண்டு முதல் நான்கு கிரெயின்சு வரையில் தேன் முதலிய அனுபானங்களில் கொடுக்கலாம். இம்முறையில் லிங்கம்புகைந்து போவதில்லை. லிங்கக்கட்டியின் மேல் படிந்திருக்கும் சேங்கொட்டை அம்சங்களை ஓர் கத்தி கொண்டு மெதுவாகச் சீவிவிட்டு எடுத்துக் கொண்டால் சிந்தூரம் நல்ல சிகப்பாக இருக்கும். அப்படியே எடுத்துக் கொண்டால் சற்று நிறம் குறைவாக இருக்கும். சேங்கொட்டை என்பதை சேராங்கொட்டை என்பர். இரண்டாவது முறை—அம்மான்

பச்சரிசியை சமூலமாக அரைத்து லிங்கக்கட்டிக்கு கவசம் கட்டிக் காயவைத்து ஓர் அகலில் வைத்து மேல் அகல் மூடி முழுவதும் சீலைமண் செய்து காயவைத்து குக்குடபுடமிட்டு ஆறவிட்டு எடுக்கச் சிந்தூரமாகும். குறிப்பு—புடம் ஜாஸ்தியாகில் லிங்கம் புகைந்து விடும். ஆகவே புடத்தைச் சிறியதாகப் போடுவதுடன் பக்கத்திலிருந்து கவனித்து லிங்கம் புகையும் ஜாடை கண்டால் புடத்தைக் கலைத்து அகலை அப்புறப்படுத்தி விடவேண்டும். பிறகு ஆறவிட்டு எடுத்துக் கொள்ளவேண்டும். லிங்கத்தைப் புடம் போடும் எந்த முறையிலும் இந்த ஜாக்கிரதை அவசியமாகும். கஜபுடமிட்டு ஆறவிட்டு எடுத்துப் பஸ்மமாவது என்பது லிங்கத்தில் யாருக்கும் சாத்தியமில்லை.

8. **மிருதார்சிங்கு**—வடமொழியில் மிருத்தாரசிருங்கம் என்ற சொல் தமிழில் மிருதார்சிங்கு என மாறியிருக்கின்றது. இது சாதாரணமாகக் கடைகளில் கிடைக்கும் சரக்கு. இது உள்ளுக்கு உபயோகமாவதில்லை. புண்களுக்குக் களிம்பாக வெளிப்பிரயோகத்தில் ஏராளமாகச் சேருகின்றது. தமிழ் நூல்களிலும் அவ்விதமே காணப்படுகின்றது. தமிழ் நூல்களில் இரண்டொரு மருந்துகளில் கூட்டு மருந்தாக இது சேர்ந்து உள்ளுக்கும் உபயோகமாகின்றது. ஆயுர்வேத நூல்களில் இதன் உபயோகம் விசேஷித்துக் காணவில்லை. வழக்கத்திலும் பிளாஸ்திரி, களிம்பு, இவைகளில் தான் வைத்தியர்கள் கையாளுகின்றனர். இதற்குச் சுத்தி தேவையில்லை.

9. **ராஜாவர்த்தம்**—இப்பெயருடன் இது வட தேசங்களில் கிடைக்கின்றது. இது ஓர் விதக்கல். இதற்குத் தமிழில் பெயர் கிடையாது. தமிழ் நூல்களில் இதைப்பற்றிய பிரஸ்தாபம் கிடையாது. யூனானியில் இது காணப்படுகின்றது. இது தனித்தும் கூட்டு மருந்துகளிலும் சேருகின்றது. எலுமிச்சம்பழ ரஸத்தில் இரண்டு மூன்று பாவனை செய்ய இது சுத்தியாகும். இதன் பஸ்ம முறை—கொம்மட்டிமாதள ரஸத்தில் அரைத்து பில்லைதட்டிக் காயவைத்து கஜபுடமிடவும். இவ்விதம் ஏழு புடமிட சற்று சிவந்து சிந்தூரமாகும். இரண்டு அல்லது மூன்று கிரெயின்சு அளவுக்கு தேன் முதலிய அநுபானங்களிலிட பிரமேஹம் முதலிய

நோய் விலகும். குறிப்பு—இதைத் தனித்துக் கொடுப்பதில் குணம் காணவில்லை. கூட்டு மருந்துகளில் சேருவதில் குணம் காணுகின்றது. இவ்விதம் சாதாரண ரஸங்கள் ஒன்பதும் பூர்த்தியாயிற்று. ஆயுர்வேத நூல்களில் காணப்படாமலும் தமிழ் நூல்களில் மாத்திரம் மிகுந்து காணப்படும் மூன்று சரக்குகளை இனிச் சொல்லுகிறோம். அவையாவன (1) வீரம், (2) பூரம் (3) கல்நார்ஆகிய இவைகளே. முதல் இரண்டும் வைப்புச் சரக்குகளாகும். ரஸத்துடன் சில வஸ்துக்களைச் சேர்த்து எரிப்பு முறையில் தயாரிக்கப்படும் இவ் வஸ்துக்கள் சற்றேரக்குறைய ரஸபஸ்மத்தின் குணங்களைக் கொடுப்பதோடு புதிய சில குணங்களையும் கொடுக்கின்றன. அவற்றுள் வீரம் என்பது கொடிய சரக்கு. உசிதமறிந்து உபயோகித்தால் மிகுந்த நன்மை செய்யும். அறியாமல் உபயோகித்தால் பல கெடுதிகள் விளைந்து பிராணஹானி உண்டாகும். ஆகவே வைத்தியனுக்கு இது ஓர் உயர்ந்த ஆயுதமாகும். ஜன்னிகளில் இந்த ஒரு வஸ்து ஒப்புயர்வற்றது. இக்கொடிய நோயைக் கண்டிப்பதில் இது தலை சிறந்து விளங்குகின்றது. இதைத் தனித்தும் கூட்டு மருந்துகளுடனும் கொடுக்கலாம். இந்த வஸ்து சேர்ந்த பல மெழுகுகள், எரிப்பு முறையில் தயாரிக்கப்பட்ட சிந்தூரங்கள், தமிழ் நூல்களில் காணப்படுகின்றன. இதற்கு அடுத்தபடியாகப் பூரத்தைச் சொல்லலாம். பூரமென்பதே ரஸகர்ப்பூரமாகும். வீரம் போலவே பூரமும் தனித்தும் பல கூட்டு மருந்துகளிலும் சேருகின்றது. இவ்விரண்டு வஸ்துவும் கஜபுடமிட்டுப் பஸ்மம் செய்தால் அதில் குணம் சற்றும் காணுமல் போகின்றது. ஆகவே சுத்திசெய்து உபயோகிப்பதிலும் எரிப்பு முறைகளிலும் இதன் குணத்தைப் பூர்ணமாகக் காணலாம். பூரத்தை ஒரே கட்டியாக எடுத்து ஓர் சதுரக்கள்ளி மரத்தின் அடிபாகத்தைக் குடைந்து அதில் வைத்து அந்த சந்தை ஷீ மரத்தின் துணுக்கால் மூடி ஒரு மண்டலம் கழித்து அந்தப் பூரக்கட்டியை எடுத்துக் கொண்டு தனித்தும் கூட்டு மருந்துகளிலும் சேர்க்கலாம். இதன் கூட்டு மருந்துகளைப் பலவகை என்ற நூலில் காணலாம்.

3. கல்நார்—இது ஓர் வகைக் கல்லாகும். இதைப்பற்றிய

விவரம் ஆயுர்வேத நூல்களில் கிடையாது. தமிழ் நூல்களில் காணப்படுகின்றது. இது இருவகையாகும். எருமைக் கொம்பு கல்நார் என்றும் சாதாரணக் கல்நார் என்றும் அவைகள் அழைக்கப் படுகின்றன. இவற்றுள் எருமைக்கொம்பு கல்நார் என்பது சிறந்த தாகும். இது சாதாரணமாகப் பற்பொடிகளில் சேர்ந்து பற்களுக்கு உறுதியைக் கொடுக்கின்றது. வாய்ப்புண் முதலிய ரோகங்களில் உள்ளுக்கு இதன் பஸ்மத்தைக் கொடுக்கலாம். பஸ்மமுறை— எருமைக்கொம்பு போலுள்ள நீல நிறமான கல்நாரைக் கல் உரலில் இடித்து சிறுசெருப்படிச்சாரில் நான்கு யாமம் அரைத்து உலர்த்தி அகலில் வைத்து மேல் அகல் மூடி சீலமண் செய்து முப்பது எருவில் புடமிடவும். இவ்விதம் பத்து புடமிடவும். நீர் எரிச்சல், காங்கை, நாபிப்புண், ஆகிய உஷ்ணரோகங்கள் தீரும். நீடித்து 4 முதல் 6 மாதம் சாப்பிட ஸ்தனங்கள், மர்மஸ்தானங்கள் இவை களின் தளர்ச்சி நீங்கி இருகும். தீராத வாய்ப்புண் தீரும். இது சோழவந்தான் G. ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்கள் அனுபவித்த முறை. சில நூல்களில் (1) வெங்காரம் (2) படிகம் (3) சங்கு (4) லப்பக்கல் (5) மணல் (6) போளம் (7) கோபிசந்தனம் (8) கடல்நுரை (9) சிறுசங்கு (10) முத்துச்சிப்பி (11) ஈயசிந்தூரம் ஆக இந்த 11 சரக்குகளும் உபரஸங்கள் எனப்படுகின்றன.

1. வெங்காரம்—இது ஓர் உப்பு. கடைகளில் சாதாரணமாக கிடைக்கும். இது பல கூட்டு மருந்துகளில் சேருகின்றது. அக்னிதீபனம் உண்டுபண்ணும். ஓர் மண் வாணயில் தேவையான வெங்காரத்தைப் போட்டு அடுப்பேற்றி நீர் சுண்டி மலரும் வரையில் எரித்து எடுக்கச சுத்தியாகும். எண்ணெ வெங்காரம் என்ற வகை மருந்துகளுக்கு உயர்ந்தது.

2. ஸ்படிகம்—பலகரைக்குச் சொன்ன முறையில் சுத்தியைச் செய்து அதே விதமாகப் புடமிடவும். பஸ்மமாகும். பலகரையின் குணங்களே இதற்குமுண்டு. இது ஆயுர்வேத நூல்களில் சில வியாதிகளில் உபயோகிக்கப்பட்டுள்ளது. நேத்ரரோகங்களில் மேலுக்கு உபயோகிக்கும் வர்த்திகளில் சேருகின்றது.

3. சங்கு—இது சாதாரணமாக எல்லாரும் அறிந்ததே. பல கரைக்குச் சொன்ன முறையில் சுத்திசெய்து அவ்விதமே புடமிட பஸ்மமாகும். பலகரையின் குணங்களே இதற்குமுண்டு. இது ஆயுர்வேத நூல்களில் பல மருந்துகளில் கூட்டு மருந்தாகச் சேரு கின்றது. தனித்தும் கொடுக்கலாம்.

4. பலப்பக்கல்—இது மாக்கல் போன்ற வஸ்து. ஓர் வகைக் கல். முன்னாளில் இதைப் பலகையில் எழுதும் கருவியாக உபயோகித்து வந்தனர். இது ரஸபஸ்மம் எரிப்பு முறையில் உதவுகின்றது. மற்றப்படி உள்ளுக்கும் வெளியிலும் இதன் உபயோகம் நூல்களில் கூறப்படவில்லை.

5. மணல்—இது அனைவருக்கும் தெரிந்த வஸ்து. எரிப்பு முறைகளில் வாலுகாயந்திரத்தில் மாத்திரம் இதன் உபயோகம் கூறப்பட்டுள்ளது.

6. போளம்—கற்றாழை ரஸங்களில் இருந்து தயாரிக்கப் படும் இவ்வஸ்து கடைகளில் சாதாரணமாகக் கிடைக்கின்றது இதில் சிகப்பு, கருப்பு, என்ற பேதங்கள் காணப்படுகின்றது. சிவந்த மஞ்சளாயும் பளபளப்புடையதான வகை எல்லாவற்றிலும் சிறந்தது. கறுத்த மஞ்சளான வகை நடுத்தரமானது. கறுத்தும் துர்கந்தமுமான வகை எல்லாவற்றிலும் தாழ்ந்ததாகும். இதைக் கொத்தமல்லிச் சாற்றிலரைத்து மேலுக்குப் பூச குழந்தைகளுக்கு வரும் அக்கி முதலிய சிறிய கொப்பளங்கள் தீரும். நெல்லிக்காய் ரசத்தில் அரைத்துப் பூச மயிர் கறுத்து வளரும். காடியில் அரைத்துப் பூச உரோமங்கள் உதிர்ந்து போவது நீங்கும். இவ் வஸ்து ஆங்கில வைத்தியத்திலுபயோகமாகின்றது. ஆயுர்வேத நூல்களில் இது அபூர்வமாகச் சில கூட்டுமருந்துகளில்சேருகின்றது. தமிழ் நூல்களில் இதன் உபயோகம் அதிகம் காணவில்லை.

7. கோபிசந்தனம்—ரஸபஸ்மம் எரிப்பு முறைகளில் இது சேருகின்றது. ஓர் வித மண் இனத்தைச் சேர்ந்தது. (8) கடல் நுரை—இது கடைகளில் கிடைக்கும் சரக்கு. இதன் உபயோகம் விசேஷித்தக் காணப்படவில்லை. கடல்நுரையை எண்ணெயில் போட்டுக் காய்ச்சி காது நோய்களுக்கு விடுவது சாதாரண வழக்கம்

9. சிறுசங்கு—(10) முத்துச்சிப்பி—இந்த இரண்டு வஸ்துக் களும் அனேகமாக எல்லாரும் அறிந்ததே. சோகிகளுக்குச் சொன்ன சுத்தியும் பஸ்மமுறையும் இவைகளுக்குப் பொருந்தும்.

குணமும் அவ்விதமே. (11) ஈயசிந்தூரம்—இது கடைச்சரக்கு. கலும்பு முறைகளில் சேருகின்றது. உள்ளுக்கு உபயோகம் ஆவதில்லை. ரஸம் 1, மகாரஸம் 8, உபரஸங்கள் 8, சாதாரண ரஸங்கள் 9, வெங்காரம் முதலிய உபரஸங்கள் 11, ஆக இவ்விதமாக மொத்தம் 37 சரக்குகள் இங்கு விவரிக்கப்பட்டன. அதோடு தமிழ் நூல்களில் அதிகப்படியாகக் காணப்படும் கல்நார், வீரம், பூரம், மூன்று சரக்குகளும் சேர்ந்து மொத்தம் 40 சரச்குகள் ரஸ நூல்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த 40 சரக்குகளில் தத்காலம் நமக்குக் கிடைக்கக்கூடாதவை சபலம், கிரிசிந்தூரம், ஆக இரண்டு வஸ்துக்களே. இனி லோகங்களைச் சொல்லுவோம். லோகங்கள் ஒன்பதென முன்பு சொன்னோம்.

1. இரும்பு—இது அனைவரும் அறிந்ததே. உருக்கு, இரும்பு, என்று ஸ்தூலமாக இதை இருவகையாகக் கொள்ளலாம். உலோகம் ஒன்பதில் அயமே மிகச் சிலாக்கியமெனக் கூறப்படு கின்றது. நூல்களில் இதன் பேதங்கள் வர்ணிக்கப்பட்டிருந்த போதிலும் தத்காலம் கிடைப்பவை முன்சொன்ன இருவகையாகும். உலோகங்களைச் சுத்தி செய்வது முக்கியமாகும். சுத்தியில்லாத உலோகம் மிக துர்குணம் செய்யும். ஆங்கிலத்திலும் பலவித உப்பு களாக அயம் தயாரிக்கப்பட்டு உள்ளுக்கு உபயோகப்படுத்தப்படுகின் றது. இரும்பைத் தகடாகத்தட்டித் திரிபலை கஷாயத்தில் எழு தடவை பழுக்கக் காய்ச்சி தோய்ப்பது முக்கிய சுத்தியாகும். 1. அயச் செந்தூரம்—நன்றாக சுத்தித்த அயத்தூள் பலம் 2 எடுத்து காடி தெளித்து இடித்து எடுத்தஉதியம்பட்டைச் சாரினால் அதை 4 சாமம் நன்றாக வரைத்து பில்லை தட்டிக்காயவைத்து கஜபுடம் போடவும். இப்படி புடம் 8ம் ஷெ தனியான சாரால் புடம் 3ம் ஆக புடம் 11. (அகத்தியர் பரிபூரணம் 400ல் = 261—பாட்டுப்படி) 2. அயச்செந்தூரம்—(மதுரையில் தமிழ்ச் சங்கத்தில் பதிப்பித்த சார சங்கிரகம் முறை) நல்ல தேனிரும்புத்தூள், சுத்தித்துப் பிறகு நல்ல காட்டாமணக் குப்பாலில் சாமம் 4 அரைத்துப் பில்லை தட்டிக் காயவைத்துச் சீலை செய்து கஜபுடம் (எரு 100)ல் போடவும். இவ விதம் புடம் 11 போடவும். பின் மருதம்பட்டை, நவ்வல்பட்டை,

குமரிசமூலமும், சமமாக 3ம் சேர்த்து இடித்துச் சார் வாங்கியதில் முன் புடமான வில்லைகளை ஊரப்போட்டு 25 நாளைக்குப் பின் எடுத்து அரைத்துப் புடம் முன் மாதிரியே போடவும். மருதம் பட்டை நவ்வல்குமரி சம எடையில் அரைத்துப்புடம் 64 போடவும். பிறகு பொற்றிலை கரிப்பான், சிந்தில் தண்டு, (மேல் தோல் நீக்கியது) சமம் இடித்தச் சாரில் அரைத்துப் புடம் 25 போடவும். ஆக மொத்தம் 100 புடம் போடவும். சகல வியாதிக்கும் சரீரம் கெட்டிப்பட்டு நல்லரத்தவிருத்திக்கும் தேன் நெய் சகல அனுபானத்திலும் கொடுக்கக் குணம். 3 உருக்குச்சிந்தூரம்—(தஞ்சை பிராணரக்ஷாமிர்தசிந்து மஹாதேவ பண்டிதாள்முறை) வெள்ளாட்டு மூத்திரம் பிடித்து வடிகட்டி எட்டியிலையில் விட்டு இடித்தச் சாரில் உருக்கு உளியை பழுக்கக்காய்ச்சி காய்ச்சி 21 தடவை துவைக்கத் தகடுகள் இதள் உதிரும். வெட்டையாகும். பிறகு (சூர்ணித்து) காந்தத்தினுல் எஃகுவை மாத்திரம் எடுத்துக் கல்மண் தூசி நீக்கி எடுத்து ஷெ சாரில் 10 நாள் ஊரவைக்கப் பின் மெழுகு போலாகும். இதை ஷெ சாரிலேயே அரைத்து அரைத்து 20 தடவை முழப்புடம் போடச் செந்தூரமாகும். குன்றி அரை வீதம் தேகபலம் அறிந்து அனுபானங்களில் கொடுக்கத் தேகம் பலக்கும். இச்சாபத்தியம். (4) (சட்டமுனி அயக்கல்பம்) நன்ருகச் சுத்தித்த தேன் இரும்புத் தூள் பலம் 8, சுத்தித்த நல்ல காந்தம் பலம் 8, கடுக்காத்தோல் பலம் 8, தானிக்காத்தோல் பலம் 8, நெல்லிவற்றல் பலம் 8, சிந்தில் (மேல் பரணி நீக்கி) தூள் பலம் 8, வெண்நாவல்பட்டைச்சார் படி 1, எலுமிச்சம்பழம் சார் படி 1, எல்லாவற்றையும் நன்ருகப் பழகிய பானையில் போட்டுக் கலக்கி மூடி அசையாமல் வைத்து விடவும். உலர உலர அடிக்கடி கிண்டி கிண்டி விடவேணும். உலர்த்திக் காயவைத்து 3-ஸ்ரீ ஆன பிறகு நன்ருகத் துலக்கிய இரும்புச் சட்டியிலே போட்டு நன்ருக எரிய விடவும். நல்ல காடாக்னியாக 3 மணி ஆக ஆகச் சட்டியிலுள்ள மருந்து செந்தணலாக ஆகும். மாதளம் பூவர்ணமானதும் பசுநெய் படி ½ விடவும். தூர நின்று வெட்டவெளியில் தான் மருந்தைச் செய்யவேணும். நல்ல காடாக்னியாக 3 அடி உயரம் மருந்து பற்றி எரியும் பின் தணியும்.

மறுபடியும் 2 மணி எரித்து ஆறவிட்டு எடுத்து மறுபடி எலுமிச்சம் பழச்சாரில் அரைத்துக் காயவைத்துக் கஜபுடம் 3ம் பொற்றிலே கரிப்பானில் புடம் 3 போதும். நல்லாத்தவிருத்தி யனுபவம் (5) மழை அயம்—சுத்தியான நல்ல அயத்தூளை மழை ஜலத்திஞல் அரைத்துப் புடம்—8 போட்டுப் பின் முன் போல் கவ்வல்பழச்சார், கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய்த்தோல் சிந்தில்கொடி சூர்ணம் சமம் போட்டு நாகப்பட்டைச் சாரும் விட்டு 3 மாத வரை வைத்து உலர்த்தி முன் போல் பசுநெய், விட்டு எரிக்கவும். ஆறின பிறகு அரைத்து எடுத்துக் கொடுக்கவும். நல்ல குணம். கீழ் சொன்ன ஐந்து வித அயச்சிந்தூரங்களும் சோழவந்தான் G. ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்கள் அனுபவித்த முறை. (6) அயச்சிந்தூரம்—சுத்தி செய்த இரும்புப் பொடியின் இடைக்குப் பதினறில் ஒரு பங்கு சுத்திசெய்த லிங்கம் சேர்த்து குமரிச்சாரால் இரண்டு யாமம் அரைத்துக்கஜபுடமிடவும். இவ்விதம் ஏழு புடமிட அயச்சிந்தூரமாகும். (7) அயச்சிந்தூரம்—திரிபலைக் கஷாயம், குமரிச்சார் இவைகளால் முறையே வகைக்குப் பத்துப்புடமிட சிந்தூரமாகும். குறிப்பு—அயத்திற்கு நூறு புடம் போடுவது மிகவும் உத்தமம். புடமும் அரைப்பும் குறைவதால் குணம் குறைந்து விடுகின்றது. ஆகவே பூர்ணகுணம் விரும்புபவர்கள் அதமபக்ஷமாக இரண்டு யாமத்திற்குக் குறையாமல் அரைக்க வேண்டும். மனேசிலே. கந்தகம், இவற்றுள் ஏதாவது ஒன்றை அயத்தூளுக்குப் பாதியளவு சேர்த்துக் குமரிச்சாரால் அரைத்து இவ்விதம் 12 கஜபுடமிட நல்ல சிந்தூரமாகும். அயச்சிந்தூரம் செய்யும் மற்றொரு முறையை ஸஹஸ்ரயோகம் 686வது ஸர்வரோகஹரம் என்ற பிரயோகத்தில் காணலாம். நூறு புடமிட்ட அயச்சிந்தூரம் என்று சிலர் சுவல்ப விலைக்கு வட தேசங்களில் விற்கின்றனர். அது அசம்பாவிதம். காந்தம்—இதுவும் அயத்தின் வகையைச் சேர்ந்ததே. அதைப் போலவே இதையும் புடம் போட்டுச் சிந்தூரம் செய்யவேண்டும். காந்தம் நமது கடைகளில் கல்காந்தம் ஒட்டுக் காந்தமென இரு விதமாகக் கிடைக்கின்றது. இவற்றுள் கல்காந்தம் உபயோகமற்றது சில ஊசிகள் பிடிக்கக் கூடியதாகப் பார்த்து காந்தத்தைத் எடுத்துக் கொள்ள வேண்டும்.

210205



ஸந்நிபாதக்காய்ச்சல்களில் செய்யவேண்டிய சிகித்சையை
இனி ஆராய்வோம். சாதாரணக்காய்ச்சல்களிலேயே ஆரம்ப
காலங்களில் ஔஷதம் கொடுக்கக்கூடாதென்பது சாஸ்திரக்கொள்
கை. இங்கு ஒரு விஷயம் கவனிக்கவேண்டும். காய்ச்சல்களில்
ஏழுநாள் முதல் பத்துநாள் வரையில் பளுவுக்குத்தக்கபடி உபவா
ஸம் செய்துவைக்கவேண்டுமென்றும் ஔஷதம் கொடுக்கலாகா
தென்றும் வியக்தமாக நூல்கள் கூறுகின்றன. ஆமதோஷம் மிகுந்து
காய்ச்சல்கள் காணுவதால் இது பொதுவிதியாகக் கொள்ளப்படு
கின்றது. அந்நிலைமையில் மருந்துகளும் அதிக அளவில் கொடுக்
கப்பட்டால் ஆமசாந்திக்குப்பதிலாக ஆமவிருத்தி நேரிடுமாதலால்
இக்காரணத்தைக்கொண்டே மருந்துகள் நிஷேதிக்கப்பட்டுள்ளன.
பேஷஜம் ஹ்யாம தோஷஸ்ய பூயோ ஜ்வலயதி ஜ்வரம்" ஆமதோ
ஷம் மிகுந்துள்ள நிலைமையில், மருந்து சேருமாகில் ஆமமதிகமா
கக்காய்ச்சல் அதிகப்படும் என்பது ஷ்டிவசனத்தின் பொருள். தாக
சமனமான ஷடங்கபானீயம் முதலியவைகள் மருந்துகளாக ஆவ
தில்லை. குடிநீரின் ஸம்ஸ்காரத்திற்காக அல்ப அளவில்சேரும்சரக்கு
கள் மருந்துகளாக ஆவதில்லை. முக்கியமருந்துகள் தருண ஜ்வரத்
தில் கூடாதென்பது சாஸ்திரக்கொள்கை. சரகம் முதலிய நூல்
களை யனுசரித்து வைத்தியம்செய்வபவர்கள் சாஸ்திரங்களுக்கிணங்
கக்காய்ச்சலின் ஆமாவஸ்தையில் ஔஷதங்களை விலக்கிவிடக்
கடமைப்பட்டிருக்கின்றார்கள். இந்நிலைமையில் ரஸகிரந்தங்கள்
உதவுகின்றன. தருணஜ்வரம் அல்லது ஆமஜ்வரத்தில் ரஸமருந்து
களை உபயோகிக்கும்படி அவை கூறுகின்றன. ஆமம் அதிகமா
கும்படி செய்யக்கூடிய கஷாயம், சூர்ணம், முதலியவைகளை ஷ்டி
வசனம் நிஷேதிக்கின்றதேயன்றி இவ்விதமில்லாமல் அல்ப
அளவில் அதாவது சில கிரெயின்சு அளவில்கொடுக்கும்மருந்துகளை
அவ்வசனம் நிஷேதிப்பதில்லை. ஆமம் அதிகமில்லாமல் காணும்
சில சாதாரணஜ்வரங்களில் கஷாயம். சுரசம், சூரணம், இவை
வியாதியைத் தணிக்கின்றன. அவ்விதமின்றி கடுமையான காய்ச்சல்
களிலும், ஸந்நிபாதக் காய்ச்சல்களிலும் கஷாயம் முதலியவைகள்
நிச்சயமாகத் தீங்கையிழைக்கின்றன. அவைகளில் ரஸக்கிரந்தங்கள்
போதிக்கும் தனி மருந்துகளையோ அல்லது கூட்டு மருந்துகளையே
உபயோகித்தல்வேண்டும் "மிருத்யுநா ஸஹயோத்தவ்யம்ஸன்னி
சிகித்ஸதா" ஸந்நிபாதக்காய்ச்சல்களில்சிகித்சை செய்வது
யுத்தம் செய்வதற்கொப்பாகும் என்று வசனம் க
நிலைமையில்" "மருந்துகள் கூடாது"! என்ற வ
சும்மாவிருப்பது அநியாயமாகும். ஆகவே
வது ஒன்றைச் சிலகாலம் உபயோ
அனுபானமாகக் கஷாயம் முதலி
மாகும். முக்கியமான ரஸம
பைரவம் (2) மஹால
பிருஹத்வாத சிந்

Registered No. M. 4018.

## திருச்சி ஆயுர்வேத ஸபா.

ஷை ஸபாவின் மாதாந்தக்கூட்டம் 8—2—42வ ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணிக்கு திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் கட்டிடத்தில் கூடிற்று. ப்ரஹ்மஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரிகள் ஆயுர்வேதாசார்ய அவர்கள் தலைமை வஹித்தார்கள். ஸ்ரீமான் T. V. ராதாகிருஷ்ண சாஸ்திரிகள் M. A. L. I M. அவர்களால் "வைத்யர்களும், ஸமூகத்தி லவர்கள் லக்ஷ்யமும்" என்பதுபற்றி உபன்யஸிக்கப்பட்டது. மாலை 7-30-மணிக்கு கூட்டம் முடிவுற்றது.



## ஸஹஸ்ரயோகம்.

இது மலையாள தேசத்தில் பிரசித்தமான ஓர் வட
மொழி வைத்ய நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு. இந்
நூலை யனுசரித்தே மலையாளத்தில் மருந்து முறைகள்
தயாரிக்கப்படுகின்றன. இந்நூலில் கஷாய முறைகள்
184, கிருதமுறைகள் 70, தைலமுறைகள் 85, சூர்ண
முறைகள் 89, லேகியமுறைகள் 20, குளிகைமுறைகள்
73, ஜன்னிமருந்துசள் 75, கண்ணோய்களுக்கு மருந்துகள்
92, காதுநோய்களுக்கு மருந்துகள் 6, மூக்குநோய்களுக்கு
ருந்துகள் 6, முகரோக மருந்துகள் 3, தொண்டை நோ
மருந்துகள் 6, உள்வாய் ரோகங்களுக்கு மருந்
கை மருந்துகள் 153 ஆக இவ்விதம் மொத்த
வியக்தமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன
வைத்யர்களுடைய தேவைக்குப் போது
. 1 தபால் கூலி வேறு.

நாராயணய்யங்கார்
மேற்கு சந்து மதுரை.



ரு, மதுரை—42.